ஐக்கிய அமெரிக்க அரசுகள் தூதரகம்
கொழும்பு
பத்திரிகைக் குறிப்பு
பொதுவிவகாரங்கள் பிரிவு
தொலைபேசி: +94 (1) 249-8100 ● தொலைநகல்: +94 (1) 244-9070
மின்னஞ்சல்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

பத்திரிகைக் குறிப்பு. 01122019

**மனித வஞ்சக்கடத்தலை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு உதவும் ஐக்கிய அமெரிக்கா**

**ஜனவரி 8, கொழும்பு:** எதிர்வரும் 3 ஆண்டுகளில் மனித வஞ்சக்கடத்தலை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு 183 மில்லியன் ரூபாயை ($1.2 மில்லியன்) ஐக்கிய அமெரிக்க அரசு வழங்கவுள்ளது. இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார அலுவலகத்தினால் இலங்கையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பிற்கு இந்த தொகை வழங்கப்படும்.

“நவீன அடிமைத்தனத்தின் வேர்க்காரணங்களைக் கையாளுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கும் சர்வதேசப் பங்காளர்களுடன் பணியாற்றுவதற்கு ஐக்கிய அரசுகள் பலமான அர்பப்ணிப்பு கொண்டுள்ளது” என் தெரிவித்து, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசப் இந்த முயற்சியை வரவேற்றதுடன், “இந்த வசதிப்படுத்தல் கருத்திட்டம் மூலமாக மனித வஞ்சக்கடத்தலின் வாதைகளோடு போராடுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு நாம் ஆதரவளிப்பதைத் தொடருவோம்” எனவும் தெரிவித்தார்.

வஞ்சக்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளில் இறங்குவதற்கு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திற்கும் இலங்கைக்குமான ஒரு சரியான நேரத் தலையீடு இதுவென இலங்கையின் பணிப்பாளர் சிம்றின் சிங் தெரிவித்தார். கட்டாயவேலை மீதான ILO சமவாயம் மற்றும் மரபொழுங்குகளின் சிபார்சுகளின் பிரயோகம் மற்றும் நியாயமான ஆட்சேர்ப்பு மீதான நன்கு அறியப்பட்ட ILO கருவிகள் என்பன தேசிய மற்றும் அடிமட்ட மட்டங்களில் உள்ள சவால்களை கையாளுவதில் ஒரு சாதகமான குறைப்பை ஏற்படுத்தும்.

இந்த வசதிப்படுத்தல் திட்டமானது இடரில் உள்ள ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் மற்றும் மனித வஞ்சக்கடத்தலால் பாதிக்கப்பட்டோருக்கு நேரடியாக உதவும். இந்தக் கருத்திட்டமானது இடையீட்டின் தாக்கத்தைப் பெருப்பிப்பதற்கும் நீடித்து நிலைக்கும் மாற்றத்தை சாதித்துக்கொள்வதற்காகவும் மாற்றத்திற்கான கொள்கை வகுப்பாளர்கள், சட்ட அமுலாக்கல், ஆட்சேர்ப்பு முகவராலயங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும்

வியாபார ஸ்தலங்கள் போன்ற மாற்றத்திற்கான முகவராலயங்களுடன் நெருக்கமாக ஈடுபடும்.